# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 135/2014

பெயர் : தங்கவேல் நாள் : 07.11.2022

வா.சா.1 – 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

கருப்பண்ணகவுண்டர், முத்துகவுண்டர், சின்னாகவுண்டர் இவர்கள் எனக்கு பங்காளிகள் ஆவார்கள் என்றால், சரியல்ல. கருப்பண்ணகவுண்டரின் மகன்கள் பழனிசாமி, ஜெகநாதன் ஆகிய இரண்டு ஆண் மக்கள் என்றால், சரிதான். முத்துகவுண்டருக்கு குருவாயி, பாவாத்தாள்(எ) பருவதம், அருக்காணி, லட்சுமி என்ற 4 மகள்கள் என்றால், சரிதான். சின்னாகவுண்டருக்கு கொழந்தாகவுண்டர், ஆறுமுகவுண்டர், மாரிகவுண்டர் ஆகியோர்கள் ஆண் மக்கள் என்றால், சரிதான். கருப்பண்ணகவுண்டர், முத்துகவுண்டர், சின்னாகவுண்டர் ஆகியோர்களுக்கு சர்வே எண் 94, 95 ஆகிய நிலங்களில் உரிமையாளர்கள் என்று சொன்னால், சரிதான். சர்வே எண் 94, 95 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் கருப்பண்ணகவுண்டர், முத்துகவுண்டர், சின்னாகவுண்டர் ஆகியோர்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால், சரியல்ல. சின்னாகவுண்டருக்கு சர்வே எண் 94 ல் வாய்மொழியாக பாகப்பிரிவினைப்படி சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அதில் அனுபவம் செய்து வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால், சரியல்ல. கருப்பகவுண்டரின் வாரிசுகளுக்கு சர்வே எண் 95/1, 2 மற்றும் 4 முதல் 11 வரையிலான சொத்துக்களை வாய்மொழியான பாகப்பிரிவினைபடி சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. முத்துகவுண்டருக்கு சர்வே எண் 94, 95 ஆகியவற்றில் உள்ள சொத்துக்களை வாய்மொழியான பாகப்பிரிவினைப்படி சொத்துக்கள் பெற்று வீடு கட்டி அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. கருப்பண்ணகவுண்டர், முத்துகவுண்டர், சின்னாகவுண்டர் ஆகியோர் தங்களுக்கு சொந்தமான பூமிகளை விற்பனை செய்துள்ளார்களா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் எந்த ஒரு சர்வே எண்களும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தென்வடல் எடப்பாடி ரோட்டுக்கு கிழக்கு என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் செக்குபந்தி விபரத்தில் தென்வடல் விவசாய வண்டித்தடத்திற்கும் கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள

செக்குபந்தி விபரம் மற்றும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள செக்குபந்தி விபரங்கள் மாறுபட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 95 க்கான பட்டா எண்ணும், வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 95 க்கான பட்டா எண்ணும் மாறுபட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தில் ருக்குமணி, பழனியம்மாள், சாந்தாமணி ஆகியோர்களுக்கு எந்த வகையில் சொத்தானது பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லையென்றால், சரிதான். பெருமாள் என்பவர் எனது தகப்பனார் ஆவார். அவருடைய அனைத்து வாரிசுகளையும் வா.சா.ஆ.4 ல் சேர்த்துள்ளோமா என்றால், சேர்த்துள்ளோம். பட்டா எண் 840 க்கான எந்த ஊர் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்றேன் என்றால், பட்டா எண் 840 க்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. பட்டா எண் 840 க்கான சான்றை புள்ளாக்கவுண்டம்பட்டி கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெறாமல், அருகில் உள்ள கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று, அதில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 95 ல் உள்ள பூமியில் கிணறு எதுவும் இல்லையென்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிணறு உள்ளதாக குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் சர்வே எண் 95 க்கு பாத்தியப்பட்டது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணப்படி எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணப்படியான சொத்தானது சர்வே எண் 94 க்கு சம்பந்தப்பட்டது மட்டும் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கருப்பண்ணகவுண்டர் வகையறா மற்றும் முத்துகவுண்டர் வகையறாக்களின் பெயர்கள் எதுவும் காணப்படவில்லை என்றால், சரியல்ல. பெயர்கள் உள்ளது. சர்வே எண் 95/6 ல் பட்டா எண் 224 ல் முத்துகவுண்டர் என்றும் சர்வே எண் 96/10 க்கு பட்டா எண் 224 ல் சி.முத்துகவுண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 95 ல் கருப்பண்ணகவுண்டருக்கும், முத்துகவுண்டருக்கும் சொத்து உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள நபர்களின் பெயர்களுக்கும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் விற்பவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால், சரிதான். கருப்பண்ணகவுண்டரின் மக்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஒரு மஞ்சுநாதன் என்பவருக்கு 23.01.1995 ல் பொது அதிகாரம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால், சரிதான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களுக்கு செக்குபந்தி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள செக்குபந்தி சர்வே எண் 95/5 க்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. சரியென்று ஒத்துக்கொண்டால் அது நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு விரோதம் ஆகிவிடும் என்பதால்தான், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.19 ஆவணப்படி கண்டுள்ள சொத்தின் மொத்த வீஸ்தீரணம் 1 ஏக்கர் 37 செண்ட் என்று சொன்னால், சரிதான். அதற்கான சர்வே எண்கள் 95/1,2,4 முதல் 11 வரையிலானவைகள் என்று சொன்னால், சரியல்ல. மேற்கண்ட விபரங்கள்தான் சரியென்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.19 ஆவணத்தில் சர்வே எண் 105/2A, 95/11, 86/16 மற்றும் 98/6 என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள செக்குபந்திகளுக்கு சர்வே எண் 95/11 ஐ தவிர சர்வே எண் 105/2A, 86/16 மற்றும் 98/6 ஆகியவைகள் தவறானவை என்று சொன்னால், சரிதான். 1 ம் பிரதிவாதி மஞ்சுநாதன் வா.சா.ஆ.21 ஆவணப்படி 2 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.19 ல் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்தார் என்றால், சரிதான். வா.சா.ஆ.21 ஆவணத்தில் வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ளது போல்தான் செக்குபந்தி விபரங்கள் உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 105/2A, 86/16 மற்றும் 98/6 சம்பந்தமாக வா.சா.ஆ.22 ஆவணப்படி ஒரு பிழைத்திருத்த ஆவணம் 1, 2 பிரதிவாதியும் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.19, வா.சா.ஆ.21 ஆகிய ஆவணங்களில் உள்ள செக்குபந்திக்கு சரியான சர்வே எண்கள் வா.சா.ஆ.22 ஆவணத்தில் சொல்லப்பட்ட சர்வே எண்கள்தான் சரியானது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.22 ஆவணத்திலும், வா.சா.ஆ.19, வா.சா.ஆ.21 ல் உள்ள சொத்து விபரங்கள்தான் கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். 2 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.23 ஆவணப்படி ஒரு பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால், சரிதான். வா.சா.ஆ.21 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விபரங்கள்தான் வா.சா.ஆ.22 ஆவணத்திலும் உள்ளது என்றால், சரிதான். 2, 3 பிரதிவாதிகள் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால், சரிதான். 4 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியின் மனைவி என்றால், சரிதான். வா.சா.ஆ.24 ஆவணப்படி 4 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். வா.சா.ஆ.23 ல் கண்டுள்ள செக்குபந்தி விபரங்கள் மற்றும் சொத்து விபரங்கள்படிதான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.24 ல் கண்டுள்ள சொத்துக்களுக்கு 4 ம் பிரதிவாதி மட்டுமே முழு உரிமையாளர் என்றாலும், அந்த சொத்துக்களில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லையென்று சொன்னாலும், சரியல்ல. 26.08.1996 ம் ஆண்டு பிழையான சர்வே எண்ணுக்கு சரியான சர்வே எண்களை சொல்லி பழனிசாமியின் குடும்பம் 2 ம்

பிரதிவாதிக்கு ஒரு சம்மதப்பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் தெரியுமா என்றால், தெரியும். அந்த ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது. கட்டுப்படுத்தாது என்று கூறுவது தவறு என்றால், சரியல்ல. வழக்கு சொத்துக்கு சம்பந்தப்பட்ட பதிவு அலுவலகம், குமாரபாளையம் என்றால், சரிதான். பழனிசாமி வகையறா 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 26.08.1996 சம்மதப் பத்திரம் நிலுவையில் உள்ள பத்திரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி ஆவணம் சம்பந்தமாக சென்னை பதிவாளர் அலுவலகத்தில் ஒரு மேல்முறையீடு செய்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.30 ஆவணம்தான் சம்மதப் பத்திரம் என்று சொன்னால், சரிதான். மேல்முறையீட்டு மனுவின் பேரில் ஏற்பட்ட உத்தரவுபடி மேற்படி நிலுவை ஆவணம் 10.12.2012ம் தேதியில் ஏற்பட்ட உத்தரவின்படி பதிவு செய்யப்பட்டவருக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 5ம் பிரதிவாதியை ஏன் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், வாதிகளுக்கு சொந்தமான சர்வே எண் 94/13C உள்ள சொத்தில் உரிமை கொண்டாடியதால், அவரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன். 5ம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 14/2014 என்ற வழக்கை இந்த நீதிமன்றத்தில் 4ம் பிரதிவாதி மற்றும் பலர்மீது விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள சொத்தில் தனக்கு எந்த உரிமையும் இல்லையென்று, எதிர் வழக்குரையில் கூறியுள்ளார் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது.

2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /தங்கவேல்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.